பக்கங்கள்:-14

# காலை முரசு

## வன்முறைகளில் ஈடுபட வேண்டாம்

**'சர்வோதயம்' அமைப்பு கோரிக்கை**

"நாட்டு மக்கள் அனைவரும் இன்று சனிக்கிழமை தாம் நம்பிக்கை வைத்திருக்கும் அரசியல் கொள்கைகளில் நிலைத் திருந்து பொருத்தமான வேட்பாளருக்கு வாக்களித்துவிட்டு, வீடுகளில் 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 05 | சனிக்கிழமை | 21.09.2024 | அதிர்வு 050



## அடுத்த ஐந்து வருடங்களுக்கு

# நாட்டை ஆள்வது யார்? மக்கள் ஆணை இன்று

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

நீதியாகவும், சுதந்திரமாகவும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்குரிய அத்தனை ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருக்கின்றன என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 06




# மக்களே காலையிலேயே சென்று வாக்களியுங்கள்

**வாக்களிக்காமல் மட்டும் இருந்து விடாதீர்கள் என்று மனோ கணேசன் எம்.பி. அறிவுறுத்து**

"தாமதமின்றி இன்று காலையிலேயே சென்று வாக்களியுங்கள். உணர்சிகளுக்கு இடம் தாராமல், நிதானமாக சிந்தித்து, தீர்மானித்த சின்னத்துக்குத் தைரியமாகச் சென்று வாக்களியுங்கள். வாக்களிக்காமல் மாத்திரம் ஒருபோதும் இருந்து விடாதீர்கள்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள 06






இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல்வாக்களிப்பின்போது அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின்போது வாக்களிப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்படுமாக இருந்தால் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குகள் சூனியமாக்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும், அந்தத் தொகுதிகளில் மீண்டும் வாக்கெடுப்பை நடத்தும் வரையில் நாடளாவிய ரீதியிலான இறுதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத 06

# அமைதி காலப்பகுதியிலும் சட்டவிரோத பிரசாரங்கள்

அமைதி காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 50 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவற்றுள் 30 முறைப்பாடுகள் சட்டவிரோத பிரசார செயற்பாடுகளுடன் தொடர்புடையவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா வேண்டுகோள்

“இந்த தேசத்தின் குடிமக்களாகிய முஸ்லிம்கள் தமது வாக்குரிமையைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருபோதும் வாக்களிப்பதில் அசிரத்தையுடன் நடந்துகொள்ள வேண்டாம்.”

– இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக உலமா சபை விடுத்துள்ள அறிக்கையில் –

“நாட்டில் கடந்த 100 வருடங்களுக்கும் மேலாக அரசியலுக்கு அப்பால் நின்று சமூக, சமய, சன்மார்க்கப் பணிகளை மேற்கொண்டுவரும் ஒரு மார்க்க, சமூக வழிகாட்டல் செய்து வரும் சபையே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா என்பதை சகலரும் அறிவர். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எந்தவொரு வேட்பாளருக்கும் எந்தவோர் அரசியல் கட்சிக்கும் ஆதரவாகவோ எதிராகவோ செயற்படுவதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது தாய்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்காகவும் குடிமக்களது நல்வாழ்வுக்காகவும் அதிகம் பிரார்த்திப்போம். இறை உதவியைப் பெற்றுத் தரும் நற்கருமங்களில் எம்மை ஈடுபடுத்திக்கொள்வோம்.

ஜனநாயக நாடொன்றில் எவரும் எந்தக் கட்சியும் தேர்தலில் போட்டியிடலாம். தான் விரும்பும் வேட்பாளரை ஆதரிப்பது அவரவர் உரிமையாகும். இந்த தேசத்தின் குடிமக்களாகிய முஸ்லிம்கள் தமது வாக்குரிமையைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருபோதும் வாக்களிப்பதில் அசிரத்தையுடன் நடந்து கொள்ளலாகாது.

பொதுவாகவும் தேர்தல் காலங்களில் குறிப்பாகவும் முஸ்லிம்கள் வார்த்தையளவிலோ செயலளவிலோ எந்தவொரு குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது. வதந்திகளைப் பரப்புதல், வீண் விதண்டாவாதம், சண்டை சச்சரவுகள், வன்செயல்களில் ஈடுபடுவது ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் என்பதைப் புரிந்து நடந்துகொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் நிதானமாக நடந்துகொள்வது கடமையாகும். முஸ்லிம் சமூகம் எப்போதும் ஒற்றுமையையும் சகவாழ்வையும் பேணும் வகையில் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

பிரபஞ்சத்தின் அத்தனை விடயங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியும் திட்டப்படியுமே நடந்தேறுகின்றன என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ள நாம், தேர்தலில் யார் வென்றாலும் அது அல்லாஹ்வின் முடிவு என்பதை உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது எமது கடமையாகும்.

ஆலிம்கள், மஸ்ஜித் நிர்வாகிகள், புத்திஜீவிகள் பொதுவாகவும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மாவட்ட மற்றும் பிரதேசக் கிளை அங்கத்தவர்கள் குறிப்பாகவும் மேற்சொன்ன அறிவுறுத்தல்களுக்கமைய பொது மக்களை வழிநடத்த வேண்டும்.”– இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வேண்டுகோள் விடுக்கிறது.

# வயோதிபப் பெண் ஜீப் மோதி மரணம்




வயோதிபப் பெண் ஒருவர் ஜீப் வாகனம் மோதி மோதி உயிரிழந்தார்.

இந்த விபத்து அத்துருகிரிய – கொடகம வீதியில் நேற்று இடம்பெற்றது என்று அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொடகமவிலிருந்து அத்துருகிரிய நோக்கிப் பயணித்த ஜீப் வாகனம் ஒன்று வீதியில் பயணித்த மேற்படி வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின்போது ஜீப் வாகனத்தின் சாரதியும் வயோதிபப் பெண்ணும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்தார்.

பெண்ணின் சடலம் அத்துருகிரிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அத்துருகிரிய பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# தெஹிவளையில் ஐந்து நாள்களில் 3 துப்பாக்கிச் சூடுகள்; 3 பேர் பலி




தெஹிவளை நெதிமால மைதானத்திற்கு அருகில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த 05 நாள்களுக்குள் தெஹிவளை மற்றும் சன நடமாட்டம் மிக்க பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களில் ஐவர் பலியாகியுள்ளனர்.

தெஹிவளை கடவத்த வீதியில் நேற்று காலை 8 மணியளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அனுர கொஸ்தா எனும் 45 வயதான ஒருவர் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெஹிவளை – கல்கிஸ்ஸ மாநாகர சபையில் பணி புரிந்த மேற்படி நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் கூறினர்.

இந்த கொலைக்கும் கடந்த 15 மற்றும் 18ஆம் திகதிகளில் தெஹிவளையை அண்மித்து நடத்தப்பட்ட 2 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக தெரியவந்துள்ளதென பொலிஸார் குறிப்பிட்டனர்.

தெஹிவளை பட்டோவிட்ட பகுதியில் கடந்த 15 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் தரிந்து மதுஷான் என்பவர் கொல்லப்பட்டார்.

கொஹுவல ரணங்கர வீதியில் கடந்த 18 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் நாகசாமி விஷ்வநாதன் என்பவர் கொலை செய்யப்பட்டார்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 02 குழுக்களுக்கு இடையிலான மோதல் காரணமாக இந்த 03 கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி தற்காலிகமாக இடைநிறுத்தம்




தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாப் பத்திரத்தின் சில வினாக்கள் பரீட்சைக்கு முன்னதாக கசிந்தன எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் நிறைவடையும் வரை இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு நிதி சார் உதவியை வழங்குவதற்கான புலமைப்பரிசில் பரீட்சை தற்போது போட்டிமிக்க பரீட்சையாக மாறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் மாணவர்களே கடுமையாக பாதிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அநீதியை இழைப்பதற்கு யாரேனும் செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோர் பதற்றமடையாதிருக்க வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்குச் சாவடிகளைப் பார்வையிட்டார் யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்



ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட வாக்குச் சாவடிகளை யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் இன்றையதினம் பார்வையிட்டார்.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபயை தெரிவு செய்வதற்காக நாளை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக யாழ் மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லப்பட்ட நிலையில் வாக்குச் சாவடிகளை ஒழுங்கமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தப் பணிகளைப் பார்வையிட்டு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நிலைமைகளை ஆராய்ந்தார்.

யாழ்.மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுஜன பெரமுனவிலிருந்து மூன்று உறுப்பினர்கள் நீக்கம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து மூன்று உறுப்பினர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம். சந்திரசேன, பவித்ராதேவி வன்னியாராச்சி மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் நிலைப்பாட்டை மீறி செயற்பட்டமையினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.




# 24 மணி நேரத்தில் 269 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் 269 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல்கள் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டது.

அத்துடன், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 141 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 126 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.




# தியாகி திலீபனின் வரலாறு பற்றிய ஆவணக் காட்சியகம் திறந்துவைப்பு

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எதிர்கால சந்ததியினருக்குக் கடத்தும் முகமாக அவரின் வரலாற்றை எடுத்தியம்பும் "பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!" எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றிலில் மலரஞ்சலி செலுத்தி நிகழ்வு ஆரம்பமாகியதுடன் பின் வரலாற்று ஆவணக் காட்சியகத்தை மாவீரர்களின் பெற்றோர் திறந்து வைத்தனர்.

தியாக தீபம் திலீபனின் வரலாற்று ப்படங்கள் தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைமை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பன்றி சுமுகமான முறையில் தேர்தலை நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மைதான். ஓரிடத்தில் நடந்த வாக்களிப்பு குழம்பி, அங்கு மீண்டும் புதிதாக ஒரு நாளில் வாக்கெடுப்பு நடத்துவதாயின், அதுவரை ஒட்டுமொத்த தேர்தலின் முடிவை வெளியிடாமல் மறைத்து வைத்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அப்படி அல்லாமல், அதுவரையான முடிவை வெளியிட்டால், மீண்டும் வாக்களிப்பு நடைபெறும் இடத்தில் அந்த முடிவுகள் வாக்களிப்பைப் பாதிக்கும்.

ஆகவே ஏதேனும் வாக்களிப்பு நிலையங்களில் மீளத் தேர்தல் நடத்தும் நிலைமை ஏற்பட்டால், வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளும் பணியையும் அதுவரை நிறுத்த வேண்டி நேரும் என்று கூறுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆயினும் இதனைக் குறிப்பிடும் போது எனக்கு ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது.

1981 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்தான் அது. அந்தத் தேர்தலை ஒட்டி நடந்த வன்முறைகளைத் தொடர்ந்து யாழ் நூலக எரிப்பு வரை இடம்பெற்ற பல சம்பவங்களும் பலரும் அறிந்தவைதான்.

அந்தத் தேர்தல் வாக்களிப்பை ஒட்டி இடம்பெற்ற களேபரத்தில் நான்கு, ஐந்து வாக்குப் பெட்டிகள் அளிக்கப்பட்ட வாக்குகளுடன் காணாமல் போயின. அவை எங்கு என்பது இன்றுவரை கண்டுபிடிக்கப்படவே இல்லை. ஆனால் அந்த இடங்களில் மீளத் தேர்தல் நடத்தப்படாமல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அதற்கு ஒரு காரணமும் கூறப்பட்டது. காணாமல் போன நான்கு, ஐந்து வாக்குப் பெட்டிகளிலுமே இருந்திருக்கக் கூடிய வாக்குகளை, தேர்தலில் போட்டியிட்ட ஏதேனும் ஒரு தரப்புக்கு முழுமையாக சேர்த்தால் கூட, தேர்தல் முடிவுகளில் மாற்றம் வராது என்ற காரணத்தை நியாயமாக – விளக்கமாக – அப்போது கூறினார்கள்.

அது சரி எனின், இப்போது குழப்பம் ஏற்பட்டு, இடைநிறுத்தப்படக்கூடிய சில வாக்களிப்பு நிலையங்களில், கடைசியில் வரக்கூடிய பெறுபேறு, ஒட்டு மொத்தத் தேர்தலின் முடிவை மாற்றாது என்றால், அந்த இடங்களில் மறுவாக்களிப்பை நடத்தாமலேயே இறுதி முடிவுகளை வெளியிடுவார்களா?

தெரியவில்லை. தேர்தல் ஆணையத்திடம்தான் கேட்க வேண்டும்.

## மக்களே காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்திக் குறிப்பில்,

"இன்று நடைபெறப்போவது முழு நாட்டுக்குமான ஜனாதிபதித் தேர்தல். தேர்தல் சட்டப்படி வெற்றி பெற வேண்டிய வேட்பாளர், முதல் சுற்றில் 50 சதவிகிதமும், அதனுடன் மேலதிகமாகக் குறைந்த பட்சம் ஒரு வாக்கும் பெற வேண்டும். ஆகவே, ஒவ்வொரு வாக்கும் இங்கே முக்கியமாகின்றது.

இது ஜனாதிபதித் தேர்தல் என்பதால், முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதியாகின்றது. வாக்குகள் எண்ணப்படுவது, அறிவிக்கப்படுவது மாவட்ட, தொகுதி மட்டங்களாக இருந்தாலும், இங்கே முழு நாடும் ஒரு தேர்தல் தொகுதி.

ஆகவே, தாமதமின்றி இன்று காலையிலேயே சென்று வாக்களியுங்கள். உணர்சிகளுக்கு இடம் தாராமல், நிதானமாக சிந்தித்து, தீர்மானித்த சின்னத்துக்குத் தைரியமாகச் சென்று வாக்களியுங்கள். வாக்களிக்காமல் மாத்திரம் ஒருபோதும் இருந்து விடாதீர்கள்." – என்றுள்ளது.

# யாழில் பால் புரைக்கேறி பிறந்து 12 நாள்களேயான சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 12 நாள்களேயான ஆண் சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த தம்பதியினருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

பிறந்த குழந்தை நிறைகுறை காரணமாக வைத்தியசாலையில் கண்காணிப்பில் இருந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் பால்புரைக்கேறி மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## வன்முறைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைதியாக இருக்க வேண்டும். தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச்சம்பவங்களில் ஈடுபடுவதிலிருந்து மக்கள் விலகியிருக்க வேண்டும்."

– இவ்வாறு "சர்வோதயம்" அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவிருக்கும் நிலையில், இது குறித்து "சர்வோதயம்" அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. எமது நாடு முன்னெப்போதுமில்லாத பல சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் பின்னணியிலேயே இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக நாம் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, இன்னமும் அதிலிருந்து மீள்வதற்கான நிலையான வழிமுறையொன்றைக் கண்டடைந்து கொள்ளமுடியாமல் இருக்கும் நிலையில், நம்மனைவருக்கும் முன்னால் மிக முக்கியமான பொறுப்பு இருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளைப் பின்பற்றி, தமது ஜனநாயக உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தாம் நம்பிக்கை வைத்திருக்கும் அரசியல் கொள்கைகளில் நிலைத்திருந்து பொருத்தமான வேட்பாளருக்கு வாக்களித்துவிட்டு அன்றைய தினம் அமைதியாக வீடுகளில் இருப்பதே பொருத்தமானதாகும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் சவால்களிலிருந்து நாட்டை மீட்டெடுக்கக்கூடிய, சரியான நோக்கத்தையும், செயற்றிட்டத்தையும் கொண்ட ஒரு வேட்பாளரை புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்வது பிரஜைகளாகிய எமது பொறுப்பாகும்.

கட்சி, நிறம் மற்றும் உணர்வுகளுக்கு அப்பால் வேட்பாளர்களின் கொள்கையையும், செயற்றிட்டத்தையும் கருத்தில்கொண்டு, முன்னெப்போதையும் விட அறிவுபூர்வமாக வாக்கைப் பயன்படுத்த வேண்டும். அதேபோன்று தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிவுரைகளை உரியவாறு பின்பற்றி, வாக்கை வீணடிக்காமல் சரியாக அளிக்க வேண்டும்.

சுதந்திரமானதும், அமைதியானதும், நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதில் அர்ப்பணிப்புடனும், தேர்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாதவாறும் செயற்பட வேண்டும். தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதிலிருந்து மக்கள் விலகியிருக்க வேண்டும்.

அதேபோன்று மக்கள் அனைவரும் அவர்கள் விரும்புகின்ற வேட்பாளர் வெற்றியடைந்தாலும், தோல்வியடைந்தாலும் நடுநிலையான மனதுடன் அந்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

– என்றுள்ளது.

## நாட்டை ஆள்வது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், வாக்காளர்கள் அனைவரும் தமது ஜனநாயகக் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, வாக்களிப்பு நேரம் மற்றும் அதன் பின்னரான காலப் பகுதியில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுலில் இருக்கும் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் கடமைகளில் சுமார் 63 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அடுத்த ஐந்து வருடங்களுக்கு நாட்டை ஆள்வது யார் என்று முடிவெடுக்கும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூன்று பிரதான வேட்பாளர்களுக்கிடையில் கடும் போட்டி நிலவுகின்றது.

வாக்குரிமையைப் பயன்படுத்தி மக்கள் இன்று வழங்கும் ஆணையின் முடிவு நாளை தெரியவரும்.

# தனியார் ஊழியர்களுக்கும் வாக்களிக்க விடுமுறை வழங்குமாறு அறிவுறுத்தல்

இன்று ஜனாதிபதி தேர்தலின் போது, அரச மற்றும் தனியார்த் துறைகளில் சேவையாற்றும், ஊழியர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விடுமுறை அளிப்பதற்கு தொழில் வழங்குநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு விடுமுறை வழங்காத நபர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்குமாயின் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வேதனம் மற்றும் சொந்த விடுமுறையை இழக்காத வகையில் வாக்காளர்களுக்கு, தமது வாக்கை அளிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கு, விசேட விடுமுறை தொடர்பான தாபன விதிக்கோவையில், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தொடர்ச்சியாக 4 மணிநேரம் தேவை என்பதால், அன்றைய தினம் விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் தனியார்த்துறை ஊழியர்களுக்கு அவ்வாறான எழுத்து மூல கட்டளைகள் இன்மையினால், மனித உரிமை ஆணைக்குழு, தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் என்பன தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கடந்த காலங்களில் ஏற்படுத்திய உடன்பாட்டுக்கு அமைய, இந்த தேர்தலிலும் அதனைக் கடைப்பிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதற்கமைய, தனியார்த்துறையில் பணியாற்றுபவர்கள் தங்களது சேவை நிலையத்திலிருந்து வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய தூரம் 40 கிலோ மீற்றர் அல்லது அதற்கு குறைவாகக் காணப்படுமாயின் அரைநாள் விடுமுறையும், 40 முதல் 100 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரம் எனில் ஒருநாள் விடுமுறையும் வழங்கப்படல் வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தனியார் பஸ் சேவைகளில் இன்று நெருக்கடி நிலவும்



ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காகக் கொழும்பிலிருந்து தங்களது சொந்த இடங்களுக்கு அதிகளவானோர் செல்கின்றமையால் நேற்று பஸ் நிலையங்களில் கடும் நெரிசல் காணப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான மத்திய பஸ் நிலையம், புறக்கோட்டை பஸ் நிலையம், குணசிங்கபுர மற்றும் மாகும்புர பல்நிலை போக்குவரத்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் கடும் நெரிசல் ஏற்பட்டது.

மேலதிக பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துவர் என அதிகாரிகள் தெரிவித்தாலும், அவ்வாறான நிலை காணப்படவில்லையெனப் பயணிகள் குற்றஞ்சாட்டினர்.

இதுதொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவிக்கையில், தேர்தல் கடமைகளுக்காக 1,600 பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால், பஸ்களுக்குத் தட்டுப்பாடு காணப்படும் எனக் குறிப்பிட்டார்.

அதேநேரம், இன்று தனியார் பஸ்களுக்குத் தட்டுப்பாடு காணப்படும் எனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.




# இன்று வழமை போன்று ரயில் சேவை இடம்பெறும்

ஜனாதிபதித் தேர்தல் தினமான இன்று வழமை போன்று ரயில் சேவைகள் இடம்பெறும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த ரயில்வேத் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய வழமை போன்று சகல மார்க்கங்களிலும் ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



# வெளிநாட்டு கடன் வழங்குனர்களுடனான இணக்கப்பாட்டுக்கு எதிராக மனுத் தாக்கல்

சர்வதேச இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் முடிவு மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறுவதாகத் தீர்ப்பளிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவினால் இந்த மனு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில், நிதியமைச்சர், நிதியமைச்சின் செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் கடனிற்காக, 5 முதல் 7 சதவீதத்திற்கு இடைப்பட்ட வட்டி வீதம் அறவிடப்படுவதாக மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலை மீண்டும் திறக்கப்படுகிறது




தற்காலிகமாக மூடப்பட்ட ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகம் எதிர்வரும் செப்டெம்பர் 24ஆம் திகதி கற்றல் செயற்பாடுகளுக்காக மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, செப்டம்பர் 23ஆம் திகதி முதல் அனைத்து மாணவர்களும் விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

இரண்டு மாணவ குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் அண்மையில் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் சூடு நீடிக்கும்

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. இதுவரையிலும் இத்தேர்தல் குறிப்பிடத்தக்களவு அமைதியாகவும், மிகக் குறைந்த வன்முறைகளோடும் முன்நகர்ந்திருக்கின்றது.

இன்று வாக்களிப்பு தினத்திலும் அந்த நிலைமை தொடரும் என்றே பல தரப்புகளும் நம்புகின்றன.

வாக்குஎண்ணிக்கைஆரம்பித்தபின்னர் ஏதும் குழப்பங்கள், வன்முறைகள் இடம்பெறலாம் என்ற அச்சம் அரசு தரப்பில் இருப்பது மறுக்க முடியாததாகும். இவ்விடயத்தை ஒட்டி பாதுகாப்புத் தரப்புகள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வழக்கமாகத் தேர்தல் என்றால் தேர்தல் வாக்களிப்பு மற்றும் அதைத் தொடர்ந்து வாக்கு எண்ணும் பணி நீடிக்கும் வரை தேர்தல் சூடு தணியாது இழுபடும்.

வாக்கு எண்ணிக்கை முடிவுற்று, நாளை இத்தேர்தலின் இறுதி முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதும், தேர்தல் சூடு தணிந்து விடும். இதுதான் கடந்த காலங்களில் நடந்தது.

ஆனால் இந்த ஜனாதிபதித் தேர்தல் அப்படி அல்ல, ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரும் தேர்தல் சூடு புதிதாக உச்சம் பெறும் என்ற நிலைமையே உள்ளது.

ஜனாதிபதித்தேர்தல்முடிந்தகையோடு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படலாம் என்ற நிலைமையும் உள்ளது.

போதாக்குறைக்கு நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் விரைந்து நடத்தி முடிக்குமாறு உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

‘உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2023’ என்ற தேர்தலின் வாக்களிப்பே நிலுவையில் உள்ளது. அதனையே நடத்தி முடிக்கும்படி உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு ஒன்றரை வருடங்களாகிவிட்டன. அப்போது இருந்த களநிலைமை வேறு. இப்போதுள்ள அரசியல் கள நிலைமை வேறு.

அதற்குப் பின்னர் நாட்டின் அரசியலில் பல களநிலை மாற்றங்கள், அணிக் குழப்பங்கள், பிறழ்வுகள், தொடர்புகள், புதிய கூட்டுக்கள் என்று பல விடயங்கள் உருவாகிவிட்டன.

இந்தப் பின்புலத்தில் அந்தத் தேர்தலை ஒன்றரை வருடங்களுக்கு முற்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் நடத்த முயற்சித்தால் அரசியல் குழப்பங்கள், விபரீதங்கள் ஏற்படும். அவை தவிர்க்க முடியாதவையாக இருக்கும்.

ஆனால் தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரை, உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அந்தத் தேர்தலை அந்த வேட்பு மனுக்களின் அடிப்படையில் நடத்துவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

தற்போதைய தேர்தல் கூட்டுகளுக்கு மத்தியில் அந்தப் பழைய வேட்பு மனுக்களின் அடிப்படையில் அத்தேர்தலை நடத்தாமல் புதிய வேட்பு மனுக்களைக் கோரிப் பெற்று, அவற்றின் அடிப்படையில் நடத்துவதாயின் அதற்கு ஒரே வழிதான் - மார்க்கம் தான் - உண்டு.

இந்த ஒன்றரை வருட காலத்துக்குள் புதிதாக வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்கள் நீதிமன்றத்துக்கு போவதுதான் அந்த வழி.

பழைய வேட்பு மனுக்களின் அடிப்படையில் தற்போது அந்தத் தேர்தலை நடத்தினால் தங்களது ஜனநாயக உரிமை மறுக்கப்படுகின்றது எனத் தெரிவித்து அவர்கள் யாரேனும் நீதிமன்றை நாடிச் சென்றால் மட்டுமே இப்போது நிலையில் அந்தத் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் புதிதாக வேட்பு மனுக்கள் கோர - கேட்க - வாய்ப்புக் கிட்டும்.

இன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிந்தாலும், அந்தத் தேர்தல் களேபரமும் தேர்தல் சூடும் அடுத்த ஆண்டு நடுப்பகுதி வரை தொடரும் ஏது நிலைகளே தென்படுகின்றன.

# தமிழக மீனவர்கள் அனைவரையும் திரட்டி ஆளுநர் மாளிகையை முற்றுகை இடுவோம்

## கே.பாலகிருஷ்ணன் எச்சரிக்கை



"தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விஷயத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக மீனவர்களை திரட்டி ஆளுநர் மாளிகையை முற்றுகையிடுவோம்."

– இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இராமேஸ்வரம் பஸ் நிலையம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தின் கே.பாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"இலங்கை அரசு தமிழக மீனவர்களை தண்டனை கைதிகளாக மாற்றி, பெரும் தொகைகளை அபராதமாக விதித்து கண்மூடித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. சமீபத்தில் மீனவர்களுக்கு மொட்டை அடித்து தன்மானத்தை பறிக்கும் செயலை செய்துள்ளது. இலங்கை அரசின் இத்தகைய அத்துமீறிய செயல்களை கண்டிக்காத பிரதமர் நரேந்திர மோடி, தாங்கள் தான் உலகத்துக்கே சமாதானத்தை கொண்டு வருவதாக பேசி வருகிறார்.

ரஷ்யா – உக்ரைன் போரை நிறுத்துவதற்கு சமாதானம் செய்ய தொடர்ந்து இருநாட்டுக்கும் பயணம் செய்யும் மோடி இலங்கை அரசை கட்டுப்படுத்தி மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க முடியாதா? பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தமிழக அரசு தொடர்ந்து நிவாரண தொகை வழங்கி வருகிறது. ஆனால் மத்திய அரசு இதுவரை சல்லிக்காசு கூட கொடுக்கவில்லை.

தமிழக முதல்வர் மீனவர்கள் பிரச்சினை குறித்து தொடர்ந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதி அழுத்தம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார். ஆனால், எதையும் கண்டுகொள்ளாமல் காதுகேளாத அரசாக பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சி இருக்கிறது.

மத்திய அரசு மீனவர்களை பிரச்சினைகளை தீர்த்து, கோரிக்கைகளை நிறைவேற்றி நிரந்தர தீர்வை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில கடலோர மாவட்ட மீனவர்களை ஒன்று திரட்டி ஆளுநர் மாளிகையை முற்றுகையிடுவோம்."

– என்றார்.

# சந்திரபாபு நாயுடு செய்வது அரசியல் லட்டு தொடர்பில் ஜெகன் மோகன் கருத்து



திருப்பதி பெருமாள் கோயில் பிரசாதமான லட்டுவில் விலங்குகளின் கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சையை மறுத்துள்ள முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, மக்களின் நம்பிக்கையை முதல்வர் சந்திரபாபு நாயுடு அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றார் என விமர்சித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை முதல் இந்த விவகாரம் பேசப்பட்டு வரும் நிலையில், முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி முதல்முறையாக இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

"திருப்பதி பெருமாள் கோயில் லட்டு தயாரிக்கப்பட்ட நெய்யில், விலங்குகளின் கொழுப்பு இருந்ததாக வெளியாகி உள்ள அறிக்கை தவறானது. முதல்வர் சந்திரபாபு நாயுடு, மக்களின் நம்பிக்கையை அரசியலுக்காகப் பயன்படுத்துகிறார்" என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமராவதியில் கடந்த 18 ஆம் திகதி செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் சந்திரபாபு நாயுடு,

"திருமலையில் உள்ள ஏழுமலையான் கோயில் மிகவும் புனிதமானது. ஆனால் முந்தைய ஜெகன்மோகன் ஆட்சியில் அங்கு கொடுக்கப்பட்ட லட்டு பிரசாதத்தில் நெய்க்கு பதில், விலங்குகளின் கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாக கிடைத்த தகவலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

கோடிக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிக்க முடியாத ஜெகன்மோகனும், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸும் வெட்கப்பட வேண்டும். திருமலையின் ஒவ்வொரு அம்சமும் ஜெகன் அரசால் இழிவுப்படுத்தப்பட்டிருக்கிறது. திருப்பதி லட்டுவின் தரம் முற்றிலுமாக கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், உடனடியாக சுத்தமான நெய்யை பயன்படுத்த உத்தரவிட்டோம்." என்று தெரிவித்திருந்தார்.

# இன்னும் 2 வருடங்களில் இஸ்ரேல் அழிந்துவிடும்!

## டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் கமலா ஹாரிஸ் ஜெயித்தால் இஸ்ரேல் இன்னும் 2 வருடங்களில் பூமியில் இருந்து காணாமல் போகும் என டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வொஷிங்டன் நகரில் நடந்த இஸ்ரேலிய அமெரிக்கர்கள் கவுன்சிலின் தேசிய மாநாட்டில் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் குடியரசுக்கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப்பும் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ்ம் போட்டியிடுகின்றனர்.

தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் கமலா ஹாரிஸை கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

இந்நிலையில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“இந்நிலையில் தான் இந்த தேர்தலில் தோற்றால் அதற்கு அமெரிக்க யூதர்கள் தான் பாதி காரணமாக இருப்பார்கள்.

கமலா ஹாரிஸ் இந்த தேர்தலில் ஜெயித்தால் இஸ்ரேல் இன்னும் 2 வருடங்களில் பூமியில் இருந்து காணாமல் போகும். அதற்கு கமலாவுக்கு வாக்களித்த யூதர்களே பாதி காரணம். ஏனெனில் அவர்கள் எப்போதும் ஜனநாயகவாதிகளுக்கே வாக்களிப்பவர்களாக இருக்கின்றனர்.

ஆனால் கமலா யூதர்களை வெறுப்பவராக இருக்கிறார்.



அமெரிக்காவில் யூதர்களின் வாக்கு 40 சதவீதம் உள்ள நிலையில் நான் தோற்றால் அதற்கு பாதி காரணம் யூதர்கள்தான்.” – என்றார்.

மேலும், அவர் முந்தைய தேர்தல்களில் ஜனநாயகவாதிகளுக்கே யூதர்கள் அதிக வாக்களித்த புள்ளிவிவரங்களைப் பட்டியலிட்டார்.

சமீபத்தில் அமெரிக்க யூதர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸ/க்கு 65 சதவீத யூதர்களும் ட்ரம்புக்கு 34 சதவீத யூதர்களும் ஆதரவு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் – ரஷ்ய யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கானோர் பலி





உக்ரைனுக்கு எதிராக ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து யுத்தத்தில் ஈடுபட்ட 70 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என பகுப்பாய்வு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ரஷ்ய இராணுவத்தில் இணைந்த தரப்பினர் உட்பட 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டு உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா முழு அளவிலான யுத்தத்தை ஆரம்பித்த போதே அதிக எண்ணிக்கையிலானோர் உயிரிழந்துள்ளனர்.







# மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் நேற்றிரவு ஸ்ரீபேச்சியம்மன் ஆலயம் தீப்பிடித்து எரிந்தது!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி – உப்போடையில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஸ்ரீபேச்சியம்மன் ஆலயத்தில் தீடீரென நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8.40 மணிக்கு ஏற்பட்ட தீயினால் ஆலயம் முற்று முழுதாக எரிந்தது.

பூஜைக்காக ஏற்றப்பட்டிருந்த விளக்கு பேச்சி அம்மனின் ஓலை குடிலில் பட்டு தீ பிடித்து எரிந்துள்ளது எனக் கூறப்பட்டது.

தற்போது தீ அணைக்கப்பட்ட நிலையில் எவருக்கும் காயங்களோ உயிர்ச் சேதங்களோ ஏற்படவில்லை.

பேச்சியம்மன் ஆலயத்தோடு இணைந்ததாக இருந்த தேத்தாமரமும் தீயினால் கருகிய நிலையில் காட்சியளிக்கிறது .


ஆலயம் முற்று முழுதாக தீப்பற்றிய போதிலும் பேச்சியம்மன் சிலை எதுவித பாதிப்புமின்றி காணப்படுகிறது.

இத்தீப்பரவலால் மின் இணைப்பு வயர்களும் பற்றி எரிந்ததால் ஆலயத்தை சுற்றி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இந்தப் பேச்சி அம்மன் மிகவும் சிறப்பு வாய்ந்த தெய்வமாக இந்தப் பிரதேச மக்களால் போற்றப்படும் நிலையில் அம்மாளின் சிலை ஆரம்ப காலந்தொட்டு ஓலைக்குடிலில் வைக்கப்பட்டுள்ளமையே சிறப்பம்சமாகும்.

இந்நிலையில் ஆலயத்தை சுற்றி மறைப்புக்களை ஆலய நிர்வாகத்தினர் ஏற்படுத்தியுள்ளனர்.

இதனைப் பார்வையிட ஆலயத்தை நோக்கிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் படையெடுத்துள்ளனர். இவர்களை வீடு செல்லுமாறு ஆலய நிர்வாகத்தினர் ஒலி பெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.





# அரசியல் தலைமை மக்களின் முடிவை மதிக்க வேண்டும்!

## கரு ஜயசூரிய கோரிக்கை

மக்களின் முடிவுகளை மதிக்கும் பொறுப்புணர்வுள்ள அரசியல் தலைமைத்துவத்தை ஜனாதிபதி வேட்பாளர்களும், அரசியல் கட்சியின் தலைவர்களும் வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

“அடுத்த ஐந்து வருடங்களுக்குத் தங்களின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாய்ப்பு இலங்கை மக்களுக்குக் கிடைத்துள்ளது.

இந்த உரிமையை எவ்வித தலையீடும் இன்றி அனைத்து வாக்காளர்களும் பயன்படுத்த முடியும்.

இந்தச் சூழ்நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களை விட கட்சியின் தலைவர்களுக்கு மிகப் பெரும் பொறுப்புணர்வுள்ளது. மக்களின் முடிவுகளை மதிப்பதே அவர்களின் மிக முக்கிய கடமை.

மக்களின் முடிவுகளை மதிப்பது, நாட்டின் சட்டங்களையும், சமூக நீதியின் அடிப்படைக் கொள்கைகளையும் மதிப்பது மாத்திரமல்ல, அடிப்படை தார்மீக நாகரிக தராதரங்களைக் கடைப்பிடிப்பதுமாகும்.

அமைதியான வன்முறைகள் அற்ற தேர்தல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு இலங்கையின் தேர்தல் சமூகம் சமீப காலங்களில் வெளிப்படுத்தியுள்ள அர்ப்பணிப்பை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்த முயற்சிகள் தொடர வேண்டும். இதனைச் செய்யத் தவறினால் இலங்கை பங்களாதேஷ் போன்ற நிலைக்குத் தள்ளப்படும் ஆபத்து ஏற்படலாம்.

சில ஆபிரிக்க நாடுகளில் தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் அந்த நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை உணர்வதும், அவ்வாறான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியமாகும்.

மேலும், இன்று 21 ஆம் திகதி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர், தேசத்துக்கான பெரும் பொறுப்புணர்வை ஏற்றுக்கொள்கின்றார்.

மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் உரிய முறையில் இடம்பெறுவதை உறுதி செய்வதும், மக்கள் ஜனநாயக நடைமுறைகளில் முழுமையாக ஈடுபடுவதற்கு அனுமதிப்பதும் முக்கியமான விடயங்கள் ஆகும்.

மேலும், தனிநபர் ஒருவருக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்கும் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதன் மூலம் தற்போதைய தேர்தல் முறைமையைச் சீர்திருத்துவதும் அவசியம்.” – என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -21.09.2024




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மனநிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக் கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். திருப்தி உணர்வு காணப்படும். அதனால் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள்.இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுது போக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -21.09.2024




புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப்படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது. மகிழ்ச்சியாக இருப்பதும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல் திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

